விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 209 வள்ளுவர் ஆண்டு 2056 ஆனி 32 புதன்கிழமை (16.07.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ‘செம்மணி புதைகுழி குற்றப் பிரதேசம்’

### தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ, சட்டவைத்திய அதிகாரி பிரணவன் நீதிமன்றில் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி குற்றப் பிரதேசமே. குற்றவியல் சம்பவங்கள் நடந்தேறியமைக்கான தடயங்கள் உண்டுஎனதொல்லியல்பேராசிரியர்ராஜ்சோமதேவ, சட்ட வைத்திய அதிகாரி பிரணவன் ஆகியோர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (15ஆம் பக்கம் பார்க்க)

கனடா செல்வதற்காக

## 80 இலட்சம் ரூபாய் கொடுத்து ஏமாந்தவர்

### விபரீத முடிவெடுத்து மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவில் கனடா நாட்டுக்குச் செல்வதற்காக 80 இலட்சம் ரூபாய் பணத்தை முகவரிடம் கொடுத்தவர் 15ஆம் பக்கம் பார்க்க

க.பொ.த (சா/த) பரீட்சை

## 7 பாடங்கள் மட்டுமே

(கொழும்பு)

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ், க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு 7 பாடங்கள் மட்டுமே மதிப்பீடுசெய்யப்படும்என்றுதெரிவிக்கப்படுகிறது.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் கல்வியமைச்சை மேற்கோள்காட்டி தென்னிலங்கை ஊடகங்கள் இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளன.

இவற்றில் கணிதம், 15ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் ஆக்கிரமித்துள்ள எமது காணிகளை விடுவியுங்கள்

### ஜனாதிபதி செயலகம் அருகில் போராட்டம்




03ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டத்துக்கு இனச்சாயம் பூசுவது அபத்தமானது

### அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாக எவரும் தமிழர், முஸ்லிம் என பாகுபாடு பார்க்கப்பட்டு இனரீதியாக எவரும் கைது செய்யப்படுவதில்லை என அமைச் 15ஆம் பக்கம் பார்க்க

## சிறப்புத் தரம் பெற்ற செயலாளர்களுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவையில் சிறப்புத் தரத்தில் உள்ளவர்களுக்கான இடமாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக இருந்த மு.நந்தகோபாலன் வடக்கு மாகாண மகளிர் விவகார, புனர்வாழ்வு சமூக சேவைகள் 15ஆம் பக்கம் பார்க்க

செம்மணியில்

## நிழல்படம் எடுக்க ஊடகங்களுக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின்போது நிழல்படம் எடுப்பதற்கு மாத்திரம் ஊடக 15ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள்

### இணையம் மூலம் கடவுச்சீட்டைப் பெறலாம்

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் 15ஆம் பக்கம் பார்க்க





நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண் மகிழ 12 - 03 - 1934

கண் நெகிழ 14 - 07 - 2025



## வேலும்மயிலும் மகாபார்வதியம்மா

சிவன் கோவிலடி வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வேலும்மயிலும் மகாபார்வதியம்மா அவர்கள் (14.07.2025) அன்று திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கார்த்திகேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற வேலும்மயிலும் அவர்களின் பாசமிகு மனைவியும் இரவீந்திரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - இலங்கை வங்கி), பாலேந்திரன் (ஓய்வுநிலை பொலிஸ் இன்ஸ்பெக்ரர்), கலாவதி, கலாராணி, குகேந்திரன் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் - யாழ்.மாவட்டம்), சிவேந்திரன் (கனடா), குணேந்திரன் (லண்டன்), கலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விக்னேஸ்வரநாதன், ஆதலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.07.2025) புதன்கிழமை பி.ப 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 175 0128
076 744 0162


(4815)

*தகவல்:* குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 1969 - 09 - 05

இறப்பு 2025 - 07 - 15



## சிவஸ்ரீ சுந்தரக்குருக்கள் ஞானசர்மா

### (கமநல சேவைத்திணைக்கள உத்தியோகத்தர் – நல்லூர்)

துன்னாலையைப் பிறப்பிடமாகவும் வாகரை பூநகரி, பூதவராயர் சிவன் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஸ்ரீ சுந்தரக்குருக்கள் ஞானசர்மா அவர்கள் நேற்று (15.07.2025) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் சுந்தரக்குருக்கள் - தங்கப்பொன்னு தம்பதியரின் ஏக புதல்வனும் அமரர் அர்த்தநாரீஸ்வரக்குருக்கள் - கமலாதேவி தம்பதியரின் மருமகனும் சிவாம்பிகை (ஆசிரியர் - நல்லூர் தமிழ்ப்பெண்கள் பாடசாலை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் உமாகிருஸ்ணசர்மா (முகாமைத்துவ பீடம், 4ம் வருட மாணவன் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), சாம்பவி, கணாதீசசர்மா, சங்கவி ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2025) புதன்கிழமை பூதவராயர் சிவன் கோவிலடி, திருநெல்வேலி கிழக்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 03.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 041 7905
077 978 7229
076 257 3501

(C 3427)

*தகவல்:* குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தின் வல்வெட்டித்துறை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி. **தர்சா லால்கரன்** அவர்களின் பாசமிகு தாயார்



## அமரர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரி

தோற்றம்: 18.08.1955 மறைவு: 14.07.2025

அவர்கள் 14.07.2025 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவுத் துயருடன்...
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், பருத்தித்துறை. (C-3422)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

## பெறுகை அறிவித்தல்.

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைக்கான தேசிய பெறுகை பின்வருமாறு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் | ஒப்பந்த காலம் | மதிப்பீட்டுத் தொகை(ரூபா) (வரி நீங்கலாக) | ICTADதர பதிவு | கேள்வி வங்கி பிணைப்பணம்/ காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/13/ Cir.Bung/25/ 1113-03 | Repair & Improvement Works in Circuit Bungalow at District Secretariat, Kilinochchi, | 90 நாட்கள் | 7.6 மில்லியன் | C8 or above, Building | ரூபா. 114,000/- 11.11.2025 வரை | 2500.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல விலைக்கோரலாளர்களாலும் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவராவர்.
   I. நிர்மாணப் பயிற்சி கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் (ICTAD/CIDA) தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II. இக்டாட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   III. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச்செயற்றினுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அட்டவணைப்படுத்தப்படாமலிருத்தல் வேண்டும்
2. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே.இல:-0212285663, பக்ஸ் இல:-0212283966)
3. கேள்வி ஆவணங்களை **17.07.2025**ஆம் திகதியிலிருந்து **29.07.2025**ஆம் திகதி வரை முற்பகல் **9.00** மணி முதல் பிற்பகல் **3.00** மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்டச் செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இப் பெறுகை தொடர்பான தெளிவுபடுத்தல் கூட்டம் **(Pre bid meeting) 25.07.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
5. இரு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட, பெறுகை ஆவணங்களையும் கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணங்களையும் சகல பெறுகை ஆவணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு அமைவாக ஒப்படைத்தல் வேண்டும்.
6. முத்திரையிடப்பட்ட பெறுகை ஆவணங்கள் யாவும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "KN/............................" என ஒப்பந்த இலக்கம் குறிப்பிடப்பட்டு தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் முகவரிக்கு **30.07.2025** ஆம் திகதி முற்பகல் **10.30** மணிக்கு முன் கிடைக்கப்பெற கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். பெறுகை ஆவணங்கள் யாவும் உடனடியாக திறக்கப்படும். பெறுகைகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.
7. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாகமாட்டார்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட பெறுகைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.


**சு.முரளிதரன்**
**திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர்/மாவட்டச் செயலாளர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.** (C-3421)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எமது பூர்வீக நிலத்தை எம்மிடம் ஒப்படையுங்கள்'

# ஜனாதிபதி செயலகம் அருகில் போராட்டம்!

**(கொழும்பு)..........................**
**யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு பகுதியில் உள்ள விடுவிக்கப்படாத நிலங்களை விடுவிக்க வலியுறுத்தி ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் போராட்டமொன்று நடைபெற்றது.**






கொழும்பு கோத்தா வீதியில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் நேற்றுக் காலை அமைதியான முறையில் போராட்டம் நடைபெற்றது.

"எமது பூர்வீக நிலத்தை மீள எம்மிடம் ஒப்படையுங்கள்" என்பதைப் பிரதானமாக வலியுறுத்தும் இப்போராட்டத்தில் யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் உள்ள பாரம்பரிய நிலங்களை இலங்கை அரச படைகளிடம் இருந்து விடுவிக்க வலியுறுத்தப்பட்டது.

இதன்போது, "மண்ணாசை துறந்த புத்தரின் பிள்ளைகளுக்கு மாற்று இனத்தவரின் மண்ணில் ஏன் ஆசை?, எமது மக்கள் வாழ்வாதாரம் இழந்து வாட அரச படைகள் இலாபம் ஈட்டுவது முறையா?, பூர்வீக காணிகளை இழந்த மக்களாக எமது அகதி வாழ்க்கை போதும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தி மக்கள் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னார் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற குறித்த போராட்டத்தில், விடுவிக்கப்படாத காணிகளின் உரிமையாளர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் பலர் பங்கேற்றனர்.

போராட்டம் நடைபெற்ற பகுதியில் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கண்ணீர் அஞ்சலி



வலம்புரி பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர்
**திரு.க.திருமாலழகன்** அவர்களின் அன்பு மாமனாரும்
திருமதி **கௌசல்யா திருமாலழகன்** அவர்களின்
அன்புத் தந்தையாருமாகிய

## திரு. தம்பிப்பிள்ளை மணிசுந்தரம்

(ஓய்வுநிலை அதிபர்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி)

**தோற்றம் : 10.05.1938** **மறைவு : 15.07.2025**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும் :—
**வலம்புரிக் குடும்பம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணமட்ட கூடைப்பந்தாட்ட போட்டி

# யாழ்.இந்துக்கல்லூரி சம்பியன்





மாகாணமட்ட பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 17 வயது மற்றும் 20 வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்ட அணிகள் சம்பியனைக் கைப்பற்றியுள்ளன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற 17 வயதிற்குட்பட்டவர்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்.பரியோவான் கல்லூரியினை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றதோடு தொடர்ச்சியாக 6 ஆவது வருடமாக சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

20 வயதிற்குட்பட்டவர்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

இப் போட்டியிலும் யாழ். இந்துக் கல்லூரி வெற்றி பெற்றதோடு தொடர்ச்சியாக 2 ஆவது வருடமாக மாகாண மட்ட சம்பினாகத் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)





வட மாகாண பூப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்த வட மாகாண பூப்பந்தாட்ட பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி கடந்த சனிக்கிழமை மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் வட மாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளரும், வட மாகாண பூப்பந்தாட்ட லீக் தலைவருமான எம்.பிரின்ஸ் லெம்பேட் தலைமையில் இடம்பெற்றது. (படங்கள்- ஜோசப்நயன்)



கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தினால் நடத்தப்பட்ட கிளிநொச்சி மாவட்ட சதுரங்கப் போட்டி கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அத்தோடு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்-தேவானந்தன்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கிளிநொச்சியில் கையெழுத்து போராட்டம்



(தருமபுரம்) பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கிளிநொச்சி பொது வர்த்தக சந்தை நிலையத்திற்கு முன்பாக நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது.சம உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்திடும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காணாமலாக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதாவது நீதி வழங்கு! இன்னுமொரு அடக்குமுறைச் சட்டம் வேண்டாம்!.



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய். அனைத்து தேசிய இனங்களுக்கும்சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசியலமைப்பிற்காகப் போராடுவோம்! உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்புத் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (8-316)

## சிவபூமியாக இலங்கை செம்மணியிலும் மற்றும் நம்பூமியிலும் வன்செயல்களால் இறந்த ஆத்மா சாந்தியடையவும் 17.08.2025, 20.08.2025 இருதினமும் ஆடி அமாவாசையாகிய 24.08.2025 தினமும் அகில உலக மக்களும் பிரார்த்தனை செய்வோம்

சித்தர் சிவவாக்கியர் பாட்டு எண்-512

**மாந்தர் வாழ்வு மண்ணிலே மறந்தபோது விண்ணிலே**
**சாந்தனான ஆவியைச் சரிப்படுத்த வல்லிரேல்**
**வேந்தன் ஆகி மன்றுளாடும் விமலன் பாதம் காணலாம்**
**கூந்தலம்மை கோணல் ஒன்றும் குறிக்கொணாதுஇஃது உண்மையே**

**நாளை ஆடிப்பிறப்பு 17.08.2025 தினம் ஆடிக்கூல் காய்ச்சிப் படைத்து நம் முன்னோரை சிந்திப்போம் பகர்வோம். கார்த்திகை நட்சத்திரம் 20.08.2025 அன்று முருகனிடம் திருப்புகழ், கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம் ஓதுவோம்.**

மிக முக்கியம் 24.08.2025 ஆடி அமாவாசை அன்று விரதம் இருந்து வீட்டில் அறுசுவை உணவு சமைத்து இலையில் படைத்து நம் முன்னோரையும். **இலங்கையில் பல அனர்த்தங்களிலும் செம்மணியிலும் இறந்த ஆத்மாக்களை மண்ணில் மறந்த போது விண்ணிலே சாந்தமான ஆவியைச் சரிப்படுத்த "முடிந்தால் திருவாசகம், போற்றித் திரு அகவல் ஓதினால் நாம் வேந்தன் ஆகி மன்றுலாடும் விமலன் பாதம் காணலாம்"** என்பது "அறிவு நிலை" பா.எண் 512- சிவவாக்கியர் புரட்சிகரமான சிந்தனைகள் பல நிறைந்தது. பாட்டு இறுதியில் "இது உண்மையே" என அறுதியிட்டு கூறுகிறார் சித்தர்.

**எத்திசை எங்கு எங்கும் ஓடி எண்ணிலாத நதிகளில்**
**சுற்றியும் தலைமுழுகிச் சுத்த ஞானியாவரோ?**
**பக்தியோடு அரன்பாதம் பணிந்திடாத பாவிகாள்!**
**முத்திஇன்றி பாழ்நரகில் மூழ்கி நொந்து அலைவாரே**

எங்கு ஓடியும் அலைந்தும் ஆண்டவன் சந்நிதானத்தில் "பக்தியோடு அரன் பாதம் பணிந்திடாது பாவிகாள் முன்னோர் காட்டிய வழியில் ஆலயங்களைப் பாதுகாத்து அறநெறியில் அன்பு நெறியில் ஆசார சீலராக வழிபாட்டைப் பணிந்திடாத பாவிகாள்" முத்தி இன்றி பாழ் நகரில் மூழ்கி நொந்து அலைவரே! எனவும் சிவவாக்கியர் தனது பாட்டு எண் 526 இல் "அறிவு நிலை" என்றும் கொள்கையை சித்தர் உலகிற்கு உணர்த்துகிறார்.

**அண்டபிண்டம் தந்த எங்கள் ஆதி தேவனை**
**அகலாமலே நினைத்தே அன்புடன் பணிந்து**
**எண் திசையும் புகழ்ந்திட ஏத்தி மேத்தியே**
**ஏகமனமாக நாடி ஆடு பாம்பே**

பாம்பாட்டி சித்தர் - 5

தத்துவ உலகில் விஞ்ஞானம் என்பது இன்று மேலை நாட்டில் "சயன்ஸ்" என்ற பெயரில் வளர்ந்து ஜட இயல்கருவிகளைக் கண்டு பிடித்து அவற்றின் சாதனைகளை ஆக்கப் பணியை விட அழிவு வெறிக்கே அதிகம் பயன்படுத்தி வருகிறது. பாரத நாடு **அருளாளர்கள், சித்தர்கள், இலங்கை யோகர், செல்லப்பா அவர்கள், நம் ஆதி முன்னோர்கள்,** ஆத்ம ஞானம் என்ற பெயரால் வளர்ச்சியுற்று மனிதனின் உடலுக்குள்ளேயே இயற்கையை பயன்படுத்தி, ஒழுங்கா உயர்த்தி, இறைவனையும் தன் இதயத்திற்குள்ளேயே இருத்தி, ஆனந்தமான பேரானந்த நிலை அடைவதற்கு வழிகாட்டும். திருமுறைகளை மற்றும் திருவாசகம் சித்தர் பாடல்களையும் தந்துள்ளார்கள் நாமும் ஓதி உணர்ந்து பாடுவோம்.

**முன்னனம் எத்தனை எத்தனை சன்மமோ?**
**மூடனாயடி யேனும் அறிந்திலேன்**
**இன்னும் எத்தனை எத்தனை சன்மமோ?**
**என் செய்வேன்? கச்சி ஏகம்ப நாதனே!** பட்டினத்தார்.

ஐஞ்சு கரத்தானை அடிஇணையைப் போற்றி செய்து நெஞ்சில் பொருத்தி நிலை பெறுவது எக்காலம்.

சித்தி புத்தி கற்பக விநாயகா!



**க.கு.க.சிவபாலன்**
**போசகர், காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலயம்**

(அ-3419)

# இராசிபலன்

16.07.2025
ஆனி 32, புதன்கிழமை
சஷ்டி முன்னிரவு 8.49 மணிவரை

பூரட்டாதி காலை 6.21 மணிவரை
உதிரட்டாதி பின்னிரவு 5.04 மணிவரை
சுப நேரம் 4.30-6.00 மணிவரை

இராகுகாலம் 12.00-1.30 மணிவரை

வளவன்



மேஷம்

வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், தொழில் ரீதியாக புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.



கடகம்

தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.



துலாம்

தலைமைப் பொறுப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.



மகரம்

பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.



ரிஷபம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும், வருமானம் திருப்தி தரும்.



சிம்மம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், ரோக பயமுண்டு.



விருச்சிகம்

பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும் நாள், மகிழ்ச்சி கூடும் நாள், தூரத்து உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.



கும்பம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும்.



மிதுனம்

மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.



கன்னி

குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.



தனுசு

பெற்றோர் மீது பிரியம் கூடும், எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.



மீனம்

விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது, போசன சுகமுண்டு.

**வந்த வழியை மறவாதிருந்தால் வந்தப் பதவியும் பறிபோகாதாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4200 மில்லியன் தேங்காய்களை வருடாந்தம் உற்பத்தி செய்வோம்

## தென்னைப்பயிர்ச்செய்கை சபை



(சாவகச்சேரி)

4200 மில்லியன் தேங்காய்களை வருடாந்தம் உற்பத்தி செய்வோம் என தென்னைப் பயிர்செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்தார்.

வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தும் "இருவார கால தீவிர தேசிய கள செயற்பாடு - 2025" என்னும் தொனிப் பொருளிலான தேசிய செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் பங்கேற்புடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கச்சாயில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமானது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலேயே இந்தச் செயற்றிட்டம் யாழ். மாவட்டத்தில்தான் ஆரம்பிக்கப்படுகின்றது. உண்மையில் 3 ஆயிரம் மில்லியன் தேங்காய் உற்பத்தியை வருடாந்தம் நாம் எதிர்பார்த்தாலும் அதனை விடக் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றது. வெள்ளை ஈ தாக்கம் உள்ளிட்ட பல்வேறு நோய்த் தாக்கங்கள், விலங்குகளால் ஏற்படுத்தப்படும் சேதம் என பல காரணிகள் இதில் தாக்கத்தைச் செலுத்துகின்றன.

2030ஆம் ஆண்டு 4,200 மில்லியன் தேங்காய்களை வருடாந்தம் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற இலக்குடன் செயற்படவுள்ளோம். வெள்ளை ஈ தாக்கத்தால் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் ஒன்றரை லட்சம் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளை ஈ தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக நாம் எடுத்துள்ள இந்த முயற்சிக்கு மக்களின் ஒத்துழைப்பு அதிகமாகவே தேவை. 150 இயந்திரங்கள், 150 பணியாளர்களை நாங்கள் இங்கு அழைத்து வந்துள்ளோம். இருப்பினும் ஓர் இயந்திரத்தை இயக்குவதற்கு ஆகக் குறைந்தது 4 பேர் தேவை. எனவே எமது ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மக்கள் உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (8-30)

## புத்தக வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"காட்டுப்பழங்கள் பூநகரியின் ஒரு கொடை" என்ற புத்தக வெளியீடு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பூநகரி பிரதேசசெயலக மண்டபத்தில் கலாசார பேரவையின் உப தலைவர் பொன். தில்லை நாதன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பூநகரி பிரதேச செயலாளர் வே.ஆயகுலன், சிறப்பு விருந்தினராக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.பா.கிரிஜா மற்றும் பிரதேச சபை செயலாளர் வே.தயாபரன், கௌரவ விருந்தினர்களாக பூநகரி வைத்தியசாலை வைத்திய அதிகாரி ஸ்ரீ.ஆனந்தஸ்ரீ மற்றும் பரந்தன் சித்த வைத்தியர் திருமதி. பு.சோபிகா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நிகழ்வின் வரவேற்புரையினை நில அளவையாளர் கு. மதுரகன், தலைமையுரையினை பிரதேசசபை உறுப்பினர் பொன். தில்லை நாதன், நூல் வெளியீட்டுரை யினை பேரவைச் செயலாளர் திருமதி க. நிரூபா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். அத்துடன் புத்தக ஆய்வுரையினை கைதடி சித்த வைத்திய பீட பீடாதிபதி திருமதி. விவியன் சத்திய சீலன், ஏற்புரையினை நூலாசிரியர் கா. குலசேகரம், நன்றியுரையினை திருமதி. ஸ்ரீ.குலமகள் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளதாக ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3)

# சிறைச்சாலை அலுவலரின் வீட்டுக்கு பெற்றோல் ஊற்றி தீவைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சிறைச்சாலை அலுவலரின் வீட்டுக்குள் நுழைந்த வன்முறைக் கும்பல் ஒன்று தீ வைத்து விட்டு தப்பியோடியுள்ளது.

இந்த வன்முறைச் சம்பவம் யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையில் நேற்று இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண சிறைச்சாலையில் கடமையாற்றும் அலுவலர் கொழும்புத்துறையில் வசித்து வரும் நிலையில் அவரது வீட்டுக்குள் வன்முறைக் கும்பல் ஒன்று அத்து மீறி நுழைந்துள்ளது.

அலுவலரின் வீட்டார் உறங்கிக் கொண்டிருந்த வேளை வீட்டின் முன் பகுதிக்கு பெற்றோல் ஊற்றி தீ வைத்து விட்டு அந்தக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

வீடு தீப்பற்றி எரிந்ததை உறங்கிக் கொண்டிருந்தவர்கள் அவதானித்து உடனே எழுந்து பெரும் சிரமத்திற்கு மத்தியில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் வீட்டில் பெருமளவில் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் வீட்டின் சில பகுதிகள் தீயில் எரிந்து சேதமடைந்துள்ளன. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து , பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

# க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை பெறுபேறுகள்-2024

## யா/மகாஜனக்கல்லூரி

**9ஏ- ஆங்கில மொழி மூலம்**

வி. மிதுனாளன், சி. சிவசாகித்தியன், ம.நிரோஷ், மு.ஐஸ்வரியா, சு.கீர்த்தனா, ப.ஜஸ்மினி.

**9ஏ- தமிழ் மொழி மூலம்**

சு.கனிவிழி, பா.ததுவர்த்தனி, கு.ருசானியா, அ.பிரணவன்

**8ஏ- ஆங்கில மொழி மூலம்**

த. தமிழினியன்

**8ஏ- தமிழ் மொழி மூலம்**

அ.மக்மிலன், சா.வருண்சிகா, ஜெ.ராகவி, ம.டபீனா, மோ.கஸ்மிதா, மு.டிலக்ஷன், பி.விதுஷா, ர.சகானா, ர.சர்மிகா, ச.கஜானா, சி.திருமகள், சு.லோகிருதியா பிரமுடி, கி. கபிராஜ், உ.ஜதுமிலன்

**7ஏ- ஆங்கில மொழி மூலம்**

செ.ஜதுகிஷான்

**7ஏ- தமிழ் மொழி மூலம்**

அ.அஸ்வின், ஈ.தாசன், ஜோ.ஜேருள், கி.நஜிதா, கு.கஜானன், கு.வாகிசனா, ற.அஜின், தே.றக்ஷனா, ச.திஸாங்கன்

**6ஏ- தமிழ் மொழி மூலம்**

அ.கபிஷன், ப.அபிஷாயினி, ஈ.கஜிதன், ஜெ.பிரணவன், நி.ரினுஜா, ர.தமிழ்ப்பிரியன்

**5ஏ- ஆங்கில மொழி மூலம்**

அ.ஆருஜன், கோ.கர்ஷிகா

**5ஏ- தமிழ் மொழி மூலம்**

அ.பவித்திரா, இ.சுடரினி, இ.திலோத்தமன், சு.வானழகி, சு.சாய்ராம், அ.நிதர்ஷனா, ம.சங்கீத்தன், வி.லட்சிகா, ஜெ.ஜெயதர்ஷன், ச.டொஷகா

## யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி

யோ.தருசன்- 9ஏ, ஜ°.தரணிகா- 9ஏ, ம. துவாரகா-9ஏ, ர.யாழினி-9ஏ, கி. நிருபா-8ஏபி, ச.சிவகாமி- 8ஏபி, சி. குகாஜினி- 7ஏ 2பி, வி. கோபிகா- 7 ஏ2பி, ஜோ. மெர்சி நித்திலா 7ஏ பிசி, சி. சாருஜா- 6ஏ2பிசி, ப.தர்மிகா- 5ஏ3பிசி, ம.கஜன்- 5ஏ3பிஎஸ், ஜெ. ஜெனோசா- 5ஏ2பி2சி, பே.பவிசன்- 5ஏபி2சிஎஸ், அ.சரணியா-4ஏ4பிசி, ர.டனுஷா- 4ஏ3பி2சி, பு.சிவாஜெனி- 4ஏ2பி3சி, சௌ.துவாரகா- 4ஏ4சிஎஸ் (104)

## யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

ஜெ.நிறோஜா- 9ஏ, த.பிரணவி- 7ஏ2பி, பு.தேனுஜன்- 6ஏ பி 2சி, செ.ஆதிசன்- ஏ 3பி 4சிஎஸ், சி. சியானா- ஏ 4பி 3சிஎஸ், ஜீ.கலையரசன்- ஏ2பி3சி2எஸ்

## கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை

ச. குயிலன் - 9ஏ (316)

## யா/உடுத்துறை மகா வித்தியாலயம்

வை.ரம்சிகா- 9ஏ, யு.கவியரசி-9ஏ, ரி.குஜிஷன்-9ஏ, எஸ். கவிநிலா -9ஏ , வி. இசைவாணி-8ஏபி , எ.சங்கவி, 8ஏபி , எஸ். தேனிலா-7ஏ2 பி, கே.லாவன்யா- 7ஏ2பி, பி. கவிதரன்-7ஏ2பி, எஸ். சுடர்விழி7ஏ2பி, பி. கிறித்திகன்-6ஏ3பி, ரி. தரணிதன்- 6ஏ2பிசி, ரி.திகழிசை - 5ஏ4பி (104)

## யா/ஒஸ்மானியா கல்லூரி

எம்.ஆர்.எம் அஹ்ரத்- 3ஏ4பி2எஸ், எம்.ஆர்.எம் ரசாத் - 2ஏபி5சிஎஸ், எம்.ஜே.எம் உசைத் - ஏ3பி4சிஎஸ், ஆர்.எம்.றிலா- ஏ3பி2சி3எஸ்,

## கிளி/ வலைப்பாடு றோ.க.த.க பாடசாலை

அ. மேரி இசாயினி- 9ஏ, பி.பிப்சிகா- 7ஏபிசி, ஞா. மிருஜா- 6ஏபிசிஎஸ், வி. எழில்- 5ஏ3பிசி, சா. சத்தியா- 3ஏ3பி சி2எஸ், யூ.நிலவரசன்- 3ஏபி5சி

## வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரி

**9ஏ**


பி. ஹரனி, சி. மகிழினி, சி.சிபிக்கா, அ.வர்ணிகா, அ. ஹரணியா, சு. தன்சியா, த.கபிஸா, த. அர்ச்சனா, வோ. விதுசாலினி, து. பேரேழில் (250)

## வவுனியா விபுலானந்தா கல்லூரி

கா.கிருஸ்சிககேசன்- 9ஏ, ஸ்.கஜானன் -9ஏ, கு.சருஜசர்மா-9ஏ, இ.வோகித்-9ஏ, சி.தட்சாயினி-9ஏ, க.டிஜானா-9ஏ, தி.ஹரிணி- 9ஏ, உ.யதுசன்-9ஏ, நி.துபதாசன்- 9ஏ, யோ.ரஜீவ் -9ஏ (8- 250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் பாலியாறு குடிநீர் திட்டம் ஆராய அமைச்சர்கள் களவிஜயம்



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட வெள்ளாங் குளம் கிராமத்தில் பாலியாறு குடிநீர் திட்டம் நடைமுறைபடுத்துவதற்கான ஒருங் கிணைந்த கள விஜயம் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை இடம் பெற்றது.

குறித்த கள விஜயத்தில் வன வள மற்றும் வன ஜீவராசிகள் அமைச்சர் மற்றும் வீடு அமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர், நீர்ப்பாசன பணிப்பாளர் மற்றும் அரச உயர் அதிகாரிகள் திணைக் களத் தலைவர்கள் கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து அரச திணைக்கள அதிகாரிகளால் திட்டம் தொடர்பான விளக்கம் அமைச்சர் உள்ளிட்ட குழு வினருக்கு வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பிர தேசத்தினை அமைச்சர் குழுவினர் சென்று பார்வையிட்டனர். (8-285)

# கிளிநொச்சி விவசாயிகளால் களஞ்சியசாலைகளுக்கு நெல் விநியோகம்

(தருமபுரம்)



அரசாங்கத்தின் நெல் நிர்ணய விலைக்கு அமைய கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியசாலைகளுக்கு நெல்லினை வழங்க ஆரம்பித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை சிறுபோக நெற்செய்கையாக மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகிய இரணைமடுக்குளம் உள்ளிட்ட ஒன்பது நீர்ப்பாசன குளங்கள் மூலம் 31500 ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது.

இந் நிலையில் நெல் அறுவடை ஆரம்பிப்பதற்கு முன்பே அரசாங்கம் நிர்ணய விலையை அறிவித்தது.

அதன் அடிப்படையில் கிலோ ஒன்றுக்கு நாட்டரிசி 120 ரூபா வாகவும், சம்பா அரிசி 125 ரூபா வாகவும், கீரி சம்பா அரிசி 132 ரூபா வாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் தற்போது நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு நெல் லினை வழங்கி வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (8-316)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**கிளி/கரியாலை நாகபடுவான் இல.02 அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் தரம்-4 கலப்பு அணியைச் சேர்ந்த மாணவர்கள் 2025 ஆம் ஆண்டிற்கான செயற்பட்டு மகிழ்வோம் மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி 1 ஆம் இடத்தை பெற்றமைக்காக அம் மாணவர்களை பாராட்டுவதுடன் வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். மேலும் தங்கள் சாதனைப் பயணம் தொடரட்டும்.**

(c-3420)

**வாழ்த்துவோர்: பெற்றோர் அறக்கட்டளை**


# முதல் தடவையாக 9ஏ சித்திகளைப் பெற்று ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை சாதனை

(தருமபுரம்)

தற்போது வெளியாகியுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்டப் பாடசாலையான ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக 9 ஏ பெறு பேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய கிராமமான ஊற்றுப்புலத்தில் 1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் சக்திவேல் குயிலன் என்ற மாணவனே 9ஏ சித்திகளைப் பெற்று பாட சாலைக்கு பெருமை சேர்த் துள்ளான். (8-316)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 250 | 350 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 450 | 350 | 500 |
| தக்காளி | 180 | 180 | 200 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 280 | 220 | 250 |
| கோவா | 300 | 400 | 500 | 300 | 400 |
| கரட் | 450 | 450 | 550 | 400 | 500 |
| பூசணி | 120 | 160 | 130 | 100 | 150 |
| புடோல் | 120 | 120 | 200 | 100 | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 150-350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 130 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 600 | 650 | 500 | 600 |
| வெண்டக்காய் | 150 | 150 | 170 | 90 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 350 | 200 | 250 | 300 |
| பயற்றங்காய் | 350 | 300 | 300 | 300 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 240 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 250 | 180 | 200 |
| கறிமிளகாய் | 600 | 550 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 500 | 700 | 600 | 450 | 500 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 40-120 | 120 | 80 | 100 |
| தேசிக்காய் | 250 | 250 | 300 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 120 | 80-150 | 120-150 |
| இராசவள்ளி | 600 | 600 | 600 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 400 | 450 |
| முள்ளங்கி | 200 | 160 | 160 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 80 | 200 |


# மக்கள் வங்கி
## பிராந்திய தலைமைக் காரியாலயம் - யாழ்ப்பாணம்

மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பிராந்திய தலைமைக் காரியாலயத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள்/ சேவை மையங்களில் 31.05.2024 வரை அடகு வைக்கப்பட்டுள்ளதும் (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) 04.08.2025 திகதி வரை மீட்டெடுக்கப்படாத / புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ள திகதிகள் மற்றும் இடத்தில் காலை 8.30 மணிக்கு தொடங்கி ஏலத்தில் விற்கப்படும்.

**ஏல விற்பனை நிகழும் தினங்கள் - 05.08.2025 மற்றும் 06.08.2025**

| ஏல விற்பனை நிகழும் இடம் | யாழ் ஸ்ரான்லி வீதிக்கிளை |
|---|---|
| கிளைகள் | யாழ்/ ஸ்ரான்லி வீதி, தெல்லிப்பளை, யாழ்/ பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்/ பல்கலைக்கழகம், யாழ்/ கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம் |
| சேவை நிலையங்கள் | மானிப்பாய், கொக்குவில் (நாவலர் வீதி), மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி |

இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்யவும், ஏல விற்பனை செய்யும் இடத்தை மாற்றவும், ஒன்றிணைத்துச் செயல்பட அல்லது இச்செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர், பிராந்திய தலைமைக் காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல : 021 222 2601 : 021 222 2602**

(c-3418)

www.peoplesbank.lk

PEOPLE'S BANK
The Bank of the People


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விபத்தில் முடிந்த சைக்கிள் ஓட்டப்போட்டி

### ஒருவர் உயிரிழப்பு



(ஒட்டாவா)

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவின் பென்டிக்டன் பகுதியில் நடைபெற்ற ஒகேனகன் கிரான்போன்டோ சைக்கிள் போட்டி நிகழ்வின் போது, காரொன்றுடன் சைக்கிள் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் சைக்கிள் ஓட்ட வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேலும் இரண்டு சைக்கிளோட்ட வீரர்கள் தீவிர காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் வைற் லேக் வீதிப் பகுதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஓகன் கான் கிரான்போன்டோ விபத்து காரணமாக வைற் லேக் வீதி தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஒகேனகன் கிரான் போன்டோ என்பது வட அமெரிக்காவின் முக்கிய சைக்கிள் போட்டிகளில் ஒன்றாகும்.

இது பிரிட்டிஷ் கொலம்பியாவின் ஒகேனகன் மது உற்பத்தி மாவட்டம் வழியாக நான்கு மாறுபட்ட பாதைகளில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் சாலைகளில் பாதுகாப்பு முன்னெச்சரிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதும், விபத்து பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், அந்நாட்டு பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

## போர் நிறுத்தத்தை ஈரான் விரும்பவில்லை!

### ஈரான் அறிவிப்பு



(டெஹ்ரான்)

நாங்கள் போர் நிறுத்தத்தை நம்பவில்லை.

எந்தவொரு புதிய இராணுவ சாகசச் செயல்களுக்கும் தீர்க்கமாக பதிலளிக்க தயாராக இருக்கிறோம் என ஈரான் பாதுகாப்புத் துறை அமைச்சர் அஜீஸ் நசீர் சாதே தெரிவித்துள்ளார்.

மேற்காசிய நாடான ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பது தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தல் என்று கூறி, கடந்த மாதம் இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது ஈரானும் பதிலடி தந்தது. 12 நாட்கள் இரு தரப்பிலும் மாறி மாறி தாக்குதல் தொடர்ந்தது.

இஸ்ரேல் கடந்த மாதம் நடத்திய தாக்குதலில் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஷ்கியான் காலில் காயத்துடன், நூலிழையில் உயிர் தப்பியதாக, அந்நாட்டின் இராணுவத்துக்கு சொந்தமான பார்ஸ் ஊடகம் கூறியிருந்தது.

இந்நிலையில் ஈரான் பாதுகாப்புத்துறை அமைச்சர் அஜீஸ் நசீர்சாதே கூறியதாவது:

ஈரான் மோதலை விரிவுபடுத்த முற்படவில்லை என்றாலும், அது தனது பாதுகாப்பைக் குறைத்துவிடவில்லை. நாங்கள் போர்நிறுத்தத்தை நம்பவில்லை.

எந்தவொரு புதிய இராணுவ சாகசச் செயல்களுக்கும் தீர்க்கமாக பதிலளிக்க தயாராக இருக்கிறோம்.

எந்தவொரு ஆக்கிரமிப்பாளர்களின் சாகசச் செயல்களுக்கும் தீர்க்கமாகப் பதிலடி கொடுப்போம். பல்வேறு இக்கட்டான சூழ்நிலைகள் ஏற்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையேயான மோதல்களைத் தொடர்ந்து பதற்றம் நிலவி வரும் நிலையில், எந்த சூழ்நிலையையும் சமாளிக்க தயார் என ஈரான் பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறி இருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. (நி)

## கனடாவில் வலுக்கும் இனவெறி

### ரத யாத்திரை மீது முட்டை வீசி தாக்குதல்

(ஒட்டாவா)

கனடாவில் இந்தியர்கள் நடத்திய ரத யாத்திரையின் போது, இனந்தெரியாதவர்கள் முட்டைகளை வீசி தாக்குதல் நடத்திய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

டொரோன்டோ நகரில் இந்தியர்களின் ரத யாத்திரை நிகழ்ச்சி நடைபெற்றது. பக்திப் பாடல்களை பாடியபடியும், கடவுளின் பெயரைச் சொல்லிக் கோஷமிட்டபடி இந்தியர்கள் ஊர்வலமாக சென்று கொண்டிருந்தனர். அப்போது, அவர்கள் மீது சிலர் முட்டைகளை வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இது தொடர்பான காணொளி சமூக வலைத்தளங்களில் வெளியாகியது. அந்தக் காணொளியில் சாலையின் ஓரத்தில் இருந்த கட்டடங்களில் இருந்து முட்டைகளை, யாத்திரை சென்ற இந்தியர்கள் மீது வீசுவது தெரிய வந்தது.

இது இனவெறித் தாக்குதல் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஊர்வலத்தில் பங்கேற்றவர்கள் கூறும்போது, “முட்டைகளை வீசி தாக்குதல் நடத்தும் போது அதிர்ந்து போய் விட்டோம்.

எங்களின் ரத யாத்திரையை நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த செயலை செய்தனர்.

ஆனால், அவர்களின் எண்ணம் தோல்வியடைந்து விட்டது. வெறுப்பு ஒருபோதும் வெல்ல முடியாது,” என்றனர். (நி)



## உக்...

## முடிவுச்...

(வோஷிங்...

உக்ரைன் போ...

முடிவுக்குக்

உடன்பாடும்...

மீது அமெரிக்...

வரிகளை வி...

டொனால்ட் ட்...

தெரிவித்தார்.

நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டேவுடன் ஓவல் அலுவலகத்தில் இருந்து பேசிய ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தொடர்பில் தான் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

“ரஷ்யாவின் நடவடிக்கை தொடர்பில் நான் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளேன். 50 நாட்களில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால், நாங்கள் 100% வரிகளை விதிப்போம்” என்று ட்ரம்ப் செய்தியாளர்களிடம் கூறியதாக சர்வதேச ஊடகச் சேவையான ரொய்ட்டர்ஸ் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரைன் - ரஷ்யா போர்!
# க்கு கொண்டுவர காலக்கெடு!

ஷிங்டன்)

போரை 50 நாட்களுக்குள் க் கொண்டுவர எந்த ம் எட்டப்படாவிட்டால் ரஷ்யா ரிக்கா "மிகக் கடுமையான" விதிக்கும் என்று ஜனாதிபதி ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் ார்.

வெளியிட்டுள்ளது.

முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளை "இரண்டாம் நிலை வரிகள்" என்றும் ட்ரம்ப் விவரித்தார்.

அதாவது உலகப் பொருளாதாரத்தில் மொஸ்கோவை தனிமைப்படுத்தும் முயற்சியில் ரஷ்யாவுடன் தொடர்புகளை பேணும் வர்த்தக பங்காளிகளையும் குறிவைப்பது ஆகும்.


2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்யா தனது படையெடுப்பைத் தொடங்கியதிலிருந்து வோஷிங்டனுக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான நேரடி வர்த்தகம் சரிந்துள்ளது.

ரஷ்யாவுக்கு எதிரான இந்த இரண்டாம் நிலை வரிகள் செயற்படுத்தப்பட்டால், அது மேற்கத்தேய தடைகள் கொள்கையில் ஒரு பெரிய மாற்றமாக இருக்கும்.

மூன்று ஆண்டுகளுக்கும் மேலான போர், மேற்கத்தேய நாடுகள் மொஸ்கோவுடனான தங்கள் சொந்த நிதி உறவுகளில் பெரும்பாலானவற்றைத் துண்டித்துவிட்டன.

ஆனால் ரஷ்யா தனது எண்ணெயை வேறு இடங்களில் விற்பனை செய்யும் நடவடிக்கைகள் எடுத்துள்ளது.

இது சீனா மற்றும் இந்தியா போன்ற வாங்குபவர்களுக்கு எண்ணெய் அனுப்புவதன் மூலம் மொஸ்கோ நூற்றுக்கணக்கான பில்லியன் டொலர்களை தொடர்ந்து சம்பாதிக்க அனுமதித்துள்ளது.



நேட்டோ உறுப்பினர்கள் அமெரிக்காவிலிருந்து பில்லியன் டொலர்கள் மதிப்புள்ள ஆயுதங்களை வாங்குவார்கள் என்று ட்ரம்ப் அறிவித்தார்.

பேட்ரியாட் ஏவுகணை பாதுகாப்பு அமைப்புகள் உட்பட இந்த ஆயுதங்கள் பின்னர் உக்ரைனுக்கு அனுப்பப்படும்.

இந்த நடவடிக்கை ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு, அமெரிக்கா போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் தீவிரமாக உள்ளது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

நேட்டோவின் விரைவான நடவடிக்கை முக்கியமானது என்று கூறி மார்க் ரூட் இந்தத் திட்டத்தை ஆதரித்தார்.

ஜேர்மனி, பின்லாந்து, கனடா, நோர்வே, சுவீடன், இங்கிலாந்து மற்றும் டென்மார்க் போன்ற நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் வாங்குவதில் பங்கேற்கும் என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவிற்கான ட்ரம்பின் சிறப்புத் தூதர் ஓய்வுபெற்ற லெப்டினன்ட் ஜெனரல் கீத் கெல்லாக், உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை கீவில் சந்தித்தார்.

உக்ரைனின் வான் பாதுகாப்பு, கூட்டு ஆயுத உற்பத்தி மற்றும் மேலும் அமெரிக்க ஆதரவை வலுப்படுத்துவது குறித்து இருவரும் "பயனுள்ள உரையாடலை" நடத்தியதாக ஜெலென்ஸ்கி தெரிவித்தார். (நி)

## இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' வாங்குகிறது ருமேனியா

(புகாரெஸ்ட்)

இஸ்ரேலின் மிகச் சிறந்த வான் பாதுகாப்பு அமைப்பாக கருதப்படும் "அயர்ன் டோம்" அமைப்பைப் பெறும் முதல் ஐரோப்பிய நாடு என்ற சிறப்பை ருமேனியா பெறுகிறது.

மேற்கு ஆசிய நாடான இஸ்ரேலிடம் உள்ள அயர்ன் டோம் எனப்படும் வான் பாதுகாப்பு அமைப்பு உலகப் புகழ்பெற்றது. ஏவுகணை தாக்குதல்களில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள இஸ்ரேல் உருவாக்கியது இந்த அமைப்பு.

இது உலகின் சிறந்த வான் பாதுகாப்பு அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. எதிரி நாட்டு ஏவுகணைகள், போர் விமானங்கள், ட்ரோன் எனப்படும் ஆளில்லா சிறிய விமான[illegible]றவற்றை துல்லியமாக தாக்கி அழிக்கும் திறன் கொண்டது.


குறுகிய மற்றும் மிகக் குறுகிய வான் பாதுகாப்பு அம்சங்களுடன், அயர்ன் டோம் அமைப்பை வாங்க, ஐரோப்பிய நாடான ருமேனியா திட்டமிட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் வரும் நவம்பருக்குள் கையெழுத்தாகும் என, ருமேனியாவின் இராணுவ அமைச்சர் அயோனுஸ் மோஸ்டீனு தெரிவித்துள்ளார்.

[illegible] உலக அளவில் புகழ் பெற்றதாக இருப்பினும், அயர்ன் டோம் அமைப்பை ஒரு சில நாடுகள் மட்டுமே வாங்கியுள்ளன. இதற்கு முக்கிய காரணம், அதிக வான் பரப்பை இந்த அமைப்பு முழுமையாக பாதுகாக்க முடியாது.

வெறும், 22,000 சதுர கிலோ மீற்றர் பரப்பளவே உள்ளதால், இது இஸ்ரேலின் முக்கிய கேடயமாக உள்ளது. அமெரிக்கா, கனடா, பின்லாந்து என, ஒரு சில நாடுகள் மட்டுமே, அயர்ன் டோம் அமைப்பின் குறிப்பிட்ட சில பகுதிகளை மட்டும் வாங்கியுள்ளன.

இந்தியா, அஜர்பைஜான் உட்பட பல நாடுகளும், இந்த அமைப்பை வாங்க ஆர்வம் தெரிவித்தன. ஆனால் தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றன. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டேவிற் பீரிஸ் "தளிர்" விருது வழங்கல்








டேவிற் பீரிஸ் குழுமத்தின் வடக்கு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டுக்கான "தளிர்" நிதி விருது வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நோத்கேட் ஹோட்டலில் நடைபெற்றது.

தளிர் திட்ட டேவிற் பீரிஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் குழுத் தலைமை அதிகாரி ஜெயராஜ் சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக டேவிற் பீரிஸ் குழுமத்தின் குழுத் தலைவரும் நிர்வாக இயக்குனருமான ரோஹன திஸாநாயக்க கலந்து கொண்டதுடன் வடக்கு தொழில்முனைவோர் ஆலோசகர் மற்றும் திட்ட ஆலோசகர் ஜெகன் அருளையா மற்றும் டேவிற் பீரிஸ் குழும உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மூலதனம் மற்றும் வழிகாட்டுதல் போன்றவற்றை ஊக்குவிப்பதற்கான தளிர் செயற்றிட்டத்தில் வாகனம், Logistic, தகவல் தொழில்நுட்பம், விவசாயம், சுற்றுலா, ஏற்றுமதி உள்ளிட்ட வணிக முயற்சியாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதியும் கையளிக்கப்பட்டது.



அச்சுவேலி




சங்கானை



LOLC பினான்ஸ் நிறுவனத்தின் சங்கானை, அச்சுவேலி மற்றும் பளை நகர கிளைகள் அண்மையில் மிகவும் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டன. வடக்கு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் குறித்த கிளை நிறுவனங்கள் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# LG Electronics தேசிய வாடிக்கையாளர்களுடன் வலுவான உறவை மேம்படுத்தி தனது புதிய அலுவலகத்தை இலங்கையில் நிறுவியுள்ளது




## வர்த்தக உலகம்

LG Electronics Singapore (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் கீழ் செயற்படும் LG Electronics, கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை வணிக சந்தையில் LG Electronics மற்றும் Abans PLC நிறுவனத்துடன் பராமரித்து வந்த தனது உறவினை மேம்படுத்தும் வகையில் இந்த முக்கியமான நிகழ்வு நடந்தேறியது.

இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரத்தை நவீன ஸ்மார்ட் தயாரிப்புகள் மூலம் மேலும் உயர்த்தி, தேவையான சேவைகளை வேகமாகவும் எளிமையாகவும் வழங்குவதற்கான புதிய வாய்ப்புகளை இந்த அலுவலகம் உருவாக்குகிறது.

LG Electronics இலங்கை அலுவலகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் Keith Chung கருத்து தெரிவிக்கையில், இலங்கை விற்பனைச் சந்தையில் LG விற்பனை நாமத்தை மேலும் விரிவாக்கம் செய்து அபான்ஸ் PLC உடனான புதிய உறவை மேம்படுத்வதற்கு எதிர்ப்பார்ப்பதாக தெரிவித்தார். இலங்கை வாடிக்கையாளர்களின் நாளாந்த நடவடிக்கைகளை சுலபமாக்கும் சகல உற்பத்திகளையும் எளிதில் வழங்கக்கூடிய வாய்ப்பு இதன் மூலம் உருவாக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

LGயின் புதிய அலுவலகம் திறந்துவைத்துள்ளதன் பின்னர், Abans Retail வலையமைப்புடன் மேலும் நெருக்கமாக இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

இதன்மூலம் LG தயாரிப்புகளை இலங்கை முழுவதும் விரிவாக்கம் செய்யக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

LG Electronics Singapore (பிரைவேட்) லிமிடெட், கொரியன் இலெக்ட்ரோனிக்ஸ் உற்பத்தி நிறுவனமான LG Electronics Inc இற்கு சொந்தமான உலக விற்பனை சந்தியில் முதன்மை நிறுவனமாகும்.

LG Electronics Singapore ஆனது பொழுதுபோக்கு உற்பத்திகள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் வளிச் சீராக்கிகள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் பரந்த அளவிலான தயாரிப்புகளை இது உலகளாவிய ரீதியில் வழங்கி வருகிறது. மேலும் தகவல்களுக்கு, www. lg.com/sg ஐப் பார்வையிடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்பச்சைத் தாவரங்கள் - நாமே வளர்த்து ஊட்டச்சத்துடன் உணவாக்கலாம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

நாங்களே எங்களுடைய வீட்டிலுள்ள சிறிய இடத்தில் வளர்த்து தூய்மையாக தரமானதாக புதியதாக உண்ணக்கூடிய உணவுடன் உங்களை சந்திக்கின்றேன். நுண்பச்சை தாவரங்கள் (Microgreens) நாமே எமக்கு தேவையானளவில் வளர்த்து தினமும் உணவாக்கக் கூடிய தாவர உணவாகும். ஒரு பொழுதுபோக்காக எமது வீடுகளில் சிறியளவில் வளர்த்து சுத்தமான பொருளாக உணவாக்கக் கூடிய தாவரங்களே நுண்பச்சைகள். எமது மனைப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் மனையில் வளர்க்கப்படும் நுண்பச்சைகள் சிறந்த ஊட்டச்சத்து மிக்க உணவுப் பொருட்களாக மிளிர்வதனை அவதானிக்கலாம். சிறிய தட்டுக்களில் கொள்கலன்களில் இவற்றை வேண்டியளவு உருவாக்கிக் கொள்ளலாம்.

நுண்பச்சைகள் எனப்படுபவை மிகவும் இளமையான தாவரங்கள் வித்திலை விரிந்த காலத்திலிருந்து முதலாவது இலை உருவாவதற்கு முன்னர் அறுவடை செய்யப்பட்டு உணவுக்காக பயன்படுத்தப்படுபவை ஆகும். இவற்றிலுள்ள அதீத ஊட்டச்சத்து, சுவை மற்றும் தரம் வாய்ந்த வெளித்தோற்றம் என்பனவற்றிற்காகவும் பல்வேறு உணவுப்பதார்த்தங்கள் தயாரிப்பதற்கு உகந்ததற்காகவும் நுண்பச்சைகள் வளர்க்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. மனைத்தோட்டங்களில் மிகவும் எளிமையாக தேவையானளவிற்கு வளர்க்கப்பட்டு உணவாக கொள்ளும் செழுமைமிக்க பச்சைத்தாவரங்கள் இவை. சிறியவையாக இருந்தாலும் காரம் பெரிது கண்டீர்களோ, நாம் பயிரிடும் தாவரங்களின் நாற்றுக்களாக வளர்க்கப்படும் நுண்பச்சைகள் ஊட்டச்சத்து நிறைந்தவை. அதற்கும் மேலாக அன்ரிஒட்சிடன்கள் நிறைவாக காணப்படும் பச்சைத்தாவரங்கள். அதீத நார்த்தன்மையும் உடலில் இலகுவில் சமிபாடடையவும் கூடியவை.

சிறுகீரை, முள்ளங்கி, சூரியகாந்தி, துளசி குடும்பத்து பசில், கொண்டல்கடலை மற்றும் கொத்தமல்லி கீரை ஆகிய நுண்பச்சை தாவரங்கள் இவற்றுள் அடங்கும். இவற்றை விட எங்களூரில் காணப்படும் பல அரிய கீரைவகைகளும் இந்த நுண்பச்சை தாவரங்களுள் அடங்கும். நல்ல மண்ணில் கைக்கடக்கமான சிறிய கொள்கலன்களில் அல்லது பிளாஸ்ரிக் தட்டுக்களில் (Trays) தென்னம் தும்பு அல்லது ஓரளவு உக்கிய சோத்தியையும் இத்தாவரங்களை சிறியளவில் வளர்ப்பதற்கு பயன்படுத்தலாம். இன்னும் சிறப்பானதாக மனைகளில் உருவாகும் அடுப்படி சேதன கழிவுகளை பயன்படுத்தி மண்புழு வளர்த்தால் மண்புழு உரத்தை மண்ணுடன் கலந்து நுண்பச்சைகளுக்கான சிறந்த வளர்ப்பு ஊடகத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். பயன்படுத்தும் சிறிய கொள்கலன்களில் அதிகளவில் நீர்தேங்கக்கூடாதவாறு அதிகளவில் சூரிய ஒளியும் படாதவாறு மனைகளில் உள்ளக மற்றும் வெளியிடங்களில் இவற்றை கிடைக்கின்ற கொள்கலன்களை பயன்படுத்தி வளர்த்து அவை 1 - 3 அங்குலம் அளவில் வளர்ந்திருக்கும் நிலையில் அறுவடைசெய்து உணவாக்கிக் கொள்ளலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



நுண்பச்சைத் தாவரங்களை வளர்ப்பதில் கவனிக்க வேண்டியவை:

**1.சிறந்த தெரிவான நுண்பச்சைகளின் விதைகள்:**

மேலே குறிப்பிட்டது போல சிறுகீரை, முள்ளங்கி, சூரியகாந்தி, பசில், கொண்டல்கடலை மற்றும் கொத்தமல்லி கீரை இவற்றுடன் எங்களூரில் உணவாக்கும் நுண்பாசி தாவரங்களையும் பயன்படுத்தலாம். பசளையிடுவதால் சிறுகீரை செடியாக உருமாறி சந்தையில் விற்கப்படுகின்றது. சிறுகீரையிலுள்ள தனித்துவமான ஊட்டச்சத்து அது செடியாக மாறும்போது அற்றுப்போகின்றது. ஆதலால் சிறிதாக வளர்த்து உணவாக கொள்வோமே.

**2.வளர்ப்பதற்கான கொள்கலன் அல்லது தட்டுக்கள்:**

நுண்பச்சைகளை வளர்ப்பதற்கு ரேக்கள் அதிலும் அதிக உயரமில்லாத தட்டுக்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவற்றில் நீர்வடிந்தோடக்கூடியவாறு அடிப்பகுதியில் துளைகளிட்டு அவற்றுள் நாற்றுக்ளை வளர்ப்பதற்குகந்த நல்ல மண்ணை நிரப்பிக் கொள்ளவும். இதில் நன்றாக உக்கிய பசளையை கலந்து கொள்ளலாம். மண்புழு உரம் இன்னும் விசேடமானது. உக்கிய தென்னந்தும்பு மற்றும் சோத்தியை கலந்து நீர்வடியக் கூடிய ஊடகமாக மாற்றிக்கொள்ளவும். வளர்ப்பு கொள்கலனினுள் மண்ணை அதிகமாக இறுக்கக்கூடாது. சொகுசாக சொரியலாக ஐதாக மண் இருக்கும் போது நுண்பச்சை தாவரங்கள் வளர்வது இலகுவானதாக இருக்கும்.

**3. விதையிடல்:**

தயாரிக்கப்பட்ட கொள்கலனினுள் அல்லது தட்டுக்களுள் சிறிய விதைகளாயின் ஐதாக விதைத்து விடலாம். விதைத்த பின் அதற்கு மேலே சிறிய படையாக மண்ணை அல்லது கூட்டுப்பசளையை சிறிய படையாக இடலாம். சற்று பெரிய விதைகளாயின் இடைவெளி விட்டு விதைத்து விடலாம். நாற்றுக்கள் மிகவும் நெருக்கமாக இல்லாதவாறு அவற்றுக்கு தேவையான இடைவெளியுடன் வளர இடமளிக்க வேண்டும்.

**4. நீர்தெளித்தல்:**

தட்டுக்களுக்கு சிறிய கைத்தெளிப்பான் மூலம் நீரை தெளிக்கவேண்டும். தேவையானளவு ஈரப்பதன் மட்டும் இருக்க வேண்டும். நீர் தேக்கமடையவோ அல்லது மண்ணில் ஈரப்பதன் அதிகமானதாகவோ இருக்கக்கூடாது. நீர்த்தன்மை அதிகமாக காணப்பட்டால் பூஞ்சண தொற்று மற்றும் பக்ரீரியா நுண்ணங்கிகள் தொற்றுக்கள் வந்துவிடும். எமது மனைகளில் சிறியளவில் வளர்ப்பதால் நாம் வளர்க்கும் தட்டுக்களை அவதானித்துக் கொள்வதும் இலகுவாகிவிடும்.

**5. ஒளியுள்ள இடத்தில் வைத்தல்:**

வளர்க்கும் தட்டுக்களை ஒளியுள்ள இடத்தில் நேரடியாக சூரிய ஒளிபடாதவாறு வைத்தல் வேண்டும். ஜன்னல் கரையோரம் வைக்கும் போது வளரும் நாற்றுக்களுக்கு தேவையான ஒளி கிடைத்துவிடும். எமது மனைகளுக்குள்ளேயே இதற்கென ஒரிடம் நாம் கொடுத்துவிடலாம். மனைகளுக்குள் வளரும் தட்டுக்களை வைக்கும் போது கண்காணிப்பதும் சுலபம் அத்துடன் வித்து முளைத்து நாற்றுக்கள் வெளிக்கிளம்பும் காட்சி மனதுக்கு தெம்பையும் கொடுக்கும். இயற்கை தாவரங்களை காணுறும் போது எமதுடலில் என்டோபின் எனப்படும் சுரப்பு சுரக்கின்றது. இது எமக்கிருக்கும் அதீத வேலைப் பளுவை மனதளவில் தணித்து மனத்தை ஒருமிக்க செய்யும் வாய்ப்பை வழங்குகின்றது. இயற்கையுடன் வாழ வேண்டும் என்பதின் அர்த்தம் இதனுள் புதைந்திருக்கின்றது.

**6. அறுவடை செய்தல்:**

விதையிட்டு 7 - 21 நாட்களில் நுண்பச்சை தாவரங்கள் அறுவடைக்கு தயாராகிவிடும். அவற்றை கத்தரிக்கோல் கொண்டு அறுவடை செய்து உணவாக்கிக் கொள்ளலாம். இத்தாவரங்கள் 1-3 அங்குல உயரம் கொண்டவையாக இருப்பின் அவற்றையும் அறுவடை செய்யலாம். நுண்பச்சை தாவரங்களில் அதிகளவில் விற்றமின்கள் ஏ, சீ, மற்றும் கே என்பன இருப்பதுடன் இவற்றில் அன்ரிஒட்சிடன்களும் அதிகமாக உண்டு. இவற்றுக்கும் மேலாக அதிகளவில் நொதியங்களும் விற்றமின்களும் இன்னும் நன்மைதரும் நுண்மூலகங்களுமுண்டு. வளமான வாழ்வுக்கு மனையில் நுண்பச்சை தாவரங்களை வளர்த்து நோயற்ற வாழ்க்கையை வாழ்ந்திடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 822





வயதாகி விட்டதல்லவா? சில பேருக்கு வயதானால் மனோதைரியம் குறைந்து விடுகிறது. அடுத்தாற்போல், என் பழுவூர்ப் பாட்டனைப் பாருங்கள்! எவ்வளவு மிடுக்காக நடந்து வருகிறார்? அறுபது பிராயத்தைக் கடந்தவர் என்று யாராவது சொல்ல முடியுமா?" என்று கூறிச் சிறுநகை செய்தான் கரிகாலன்.

பழுவேட்டரையர் இதற்கு மறுமொழி ஏதேனும் சொல்ல வேண்டும் என்று எண்ணித் தமது தொண்டையைக் கனைத்துக் கொண்டார். அது சிங்க கர்ஜனையைப் போல் முழங்கிற்று.

"பாருங்கள்! பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்தால், பாரெங்கும் நடுங்கும் என்று சொல்வது எவ்வளவு சரியாயிருக்கிறது. கந்தமாறா! வந்தியத்தேவா! பார்த்திபேந்திரா! நீங்கள் எல்லாம் பழுவூர்ப் பாட்டன் வயதில் இவ்வளவு திடமாக இருப்பீர்களா என்று யோசித்துப் பாருங்கள்.

ஒருவேளை அவரைப் போல் தொண்டையைக் கனைப்பீர்கள். ஆனால் அவர் வயதில் அந்தப்புரத்துக்குப் புதிய பெண்ணைக் கொண்டு வர மாட்டீர்கள். தாத்தா! தங்களுடன் இளைய ராணியையும் அழைத்து வந்திருக்கிறீர்கள் போலிருக்கிறதே! முன் வாசல் மாடத்தில் பார்த்தேன்! இளையராணி எப்படிப் பிரயாணம் செய்து வந்தார்கள்? மூடுபல்லக்கிலா? ரதத்திலா? அல்லது வண்டியிலா?"

பழுவேட்டரையர் அப்போது குறுக்கிட்டு, "யானை மீது அம்பாரியில் வைத்து நாடு நகரமெல்லாம் அறிய அழைத்து வந்தேன்!" என்று பெருமிதத்துடன் கூறினார்.

"அப்படித்தான் செய்ய வேண்டும், தாத்தா! இனிமேல் எப்போதும் அப்படியே செய்யுங்கள்! மூடுபல்லக்கில் மட்டும் அழைத்து வர வேண்டாம். அதனால் பல விரஸமான வதந்திகள் ஏற்படுகின்றன. ஒரு வேடிக்கையைக் கேளுங்கள் பழுவூர் இளையராணியின் மூடுபல்லக்கில் சில சமயம் என் சித்தப்பன் மதுராந்தகன் இரகசியமாக ஏறிக் கொண்டு ஊர் ஊராகப் போய் வருகிறானாம்! இப்படி ஒரு வதந்தி நாடெங்கும் பரவியிருக்கிறது!" என்று கரிகாலன் கூறி இடி இடி என்று சிரித்தான்.

ஆனால் அங்கிருந்த மற்றவர்கள் யாரும் சிரிக்கவில்லை. ஒவ்வொருவர் மனத்திலும் ஒவ்வொரு விதக் கலக்கம் ஏற்பட்டது.

வந்தியத்தேவன் தன் மனத்திற்குள் "ஐயோ! எப்பேர்ப்பட்ட தவறு செய்து விட்டோம்! இந்த வெறி பிடித்த மனிதரிடம் எல்லாவற்றையும் சொல்லி விட்டோமே! ஒன்றையும் மிச்சம் வைத்துக் கொள்ளாமல் பகிரங்கப்படுத்தி விடுவார் போலிருக்கிறதே!" என்று எண்ணிக் கலங்கினான்.

பெரிய பழுவேட்டரையரின் உள்ளம் எரிமலையின் உட்பிரதேசத்தைப் போல, தீயும் புகையுமாகக் குழம்பிக் கொதித்துக் கனன்றது. தீயும் புகையும் எரிமலை வாயின் வழியாக வருவதற்கு முன்னால் உண்டாகும் பயங்கர உறுமலைப் போல் அவர் மீண்டும் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

அவர் பேசுவதற்கு முன் பார்த்திபேந்திரன் ஓர் அடி முன்னால் பெயர்ந்து வந்து, "கோமகனே! பழுவூர் இளையராணியை நான் வெகு சிறிய காலந்தான் பார்த்துப் பழக நேர்ந்தது.

அதற்குள்ளேயே அவர் எத்தகைய பத்தினித் தெய்வம் என்பதை அறிந்து கொண்டேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மன்னர் தேவை



மரகதபுரி மன்னர் நோய்வாய்ப்பட்டுப் படுத்து கிடந்தார். அவருக்கு பின் பட்டத்துக்கு வரவேண்டிய இளவரசர் மகேந்திரன் தனக்கு இராஜ்ய பரிபாலனை வேண்டாம் என்றும் தான் ஒரு வைத்தியராக இருக்கவே விருப்பம் தெரிவித்தார். இதனால் மரகதபுரிக்கு அடுத்து யாரை மன்னனாக்க போகிறார்கள் என்று மக்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள்.

மன்னனின் உடல் நிலையோ மிகவும் மோசமாக இருந்தது. எப்பொழுது வேண்டுமானாலும் அவருக்கு இறப்பு ஏற்படலாம். அதற்குள் ஆட்சி பொறுப்புக்கு வருபவர்கள் முடிசூட்டிக்கொள்ள வேண்டும். மன்னரை பார்க்க மந்திரியார் உள்ளே வருகிறார்.

மன்னர் மந்திரியாரை கண்டவுடன் வாருங்கள் மந்திரியாரே என்று அழைக்கிறார். எப்படி இருக்கிறீர்கள் மன்னா? கவலையுடன் கேட்டார் மந்திரியார்.

அப்படியேதான் இருக்கிறேன். எனக்கு பின்னால் அடுத்து யார் ஆட்சிக்கு வரப்போகிறார்கள் என்ற கவலை தான் என் உள்ளத்தை அரித்துக்கொண்டிருக்

மந்திரியார் மன்னரை பார்த்து இளவரசர் ஆட்சி புரிய ஒத்துக்கொண்டால் நமக்கு இந்தப் பிரச்சினை வந்திருக்காது என்று சொன்னார்.

மன்னர் வருத்தத்துடன் அவன் ஆட்சிக்கு வரமாட்டான் என்று இவன் பிறக்கும்போதே ஜோசியர் சொல்லி விட்டார் மந்திரியாரே என்று சொல்லவும், மந்திரியார் வியப்புடன் இது எப்பொழுது மன்னா? என்று வியப்புடன் கேட்டார்.

உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நானும் இளவரசனின் அம்மாவும் ஒரு முறை ஆன்மீக சுற்றுப்பயணம் போனோமே. அப்பொழுது இளவரசன் இவள் வயிற்றில் இருந்தான். ஒரு ஊர் சென்று இரவாகிவிட்டதால் அங்கேயே தங்கி விட்டோம். ஆனால் அன்று இரவில் இவளுக்கு வலி கண்டு அவசர அவசரமாய் அந்த ஊரில் பிரசவம் பார்க்கும் ஒரு வைத்திய பெண்ணை கூப்பிட்டோம். அந்த பெண்ணோ என் மகளுக்கு எப்பொழுது வேண்டுமானாலும் பிரசவம் நடக்கப் போகிறது, இந்த கட்டத்தில் நான் அங்கு வந்து விட்டால் என் மகள் கதி என்னவாவது? என்று கேட்டாள். வேண்டுமானால் அரசியை எனது இல்லத்துக்கு கூட்டி வந்து விடுங்கள், நான் இங்கேயே வைத்து பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லிவிட்டாள். நானும் ராணியை அழைத்துக்கொண்டு இவள் இல்லத்திற்கு சென்றேன். சென்ற அரை நாழிகையில் இவளுக்கு இளவரசன் பிறந்து விட்டான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உங்கள் குழந்தைகளை நல்லவர்களாக்க சிறந்த வழி, அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கச் செய்வதே
– ஜார்ஜ் பெர்னாட்ஷா

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## நம் தமிழ் மக்கள் படுகின்ற துயரத்தை தமிழக சகோதரர்கள் உணர வேண்டும்

30 ஆண்டு கால யுத்தம். யுத்த காலத்தில் எம் தமிழ் மக்கள் பட்ட அவலங்கள், இழப்புகள், இடப்பெயர்வுகள், அங்கவீனங்கள் சொல்லி மாளா.

போரின் வடுக்கள் இன்னமும் ஆறவில்லை. செம்மணிப் புதைகுழியில் தோண்டி எடுக்கப்படுகின்ற மனித எலும்புக்கூடுகள் நம் தமிழ் மக்கள் பட்ட அவலத்தின் சாட்சியங்கள்.

நிலைமை இவ்வாறாக இருந்தும் இன்னமும் எமக்குத் தீர்வும் கிடைக்கவில்லை. நீதியும் நிலைநாட்டப்படவில்லை.

ஆம், யுத்தத்தின் வடுக்களைச் சுமந்த வண்ணம் வறுமையும் துயரமுமாக வாழ்கின்ற நம் மக்கள் கொஞ்சமல்ல.

என்ன செய்வது இந்த நாட்டில் நாம் அநாதைகளாகிவிட்டோம். ஆக, எங்களுக்கு இருக்கக்கூடிய ஒரே ஒரு ஆறுதல் எங்கள் தமிழக சகோதரர்கள் மட்டுமே.

அங்கும் தமிழக மாநில அரசு இப்போது ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதை அடியோடு நிறுத்திவிட்டது.

இந்த நிலையில் ஈழத் தமிழ் மக்களை நேசிக்கின்ற தமிழக உறவுகள் எங்களுக்காகக் குரல் கொடுப்பது மட்டுமே எங்களின் பிராண சக்தியாக உள்ளது.

அதிலும் செம்மணி மனிதப் புதைகுழிகளில் மனித எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டபோது, எங்கள் தமிழகத்தின் உடன் பிறப்புகள் சீமான், கௌதமன், ரி.இராஜேந்தர், நடிகர் சத்தியராஜ் உள்ளிட்டவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் எங்களின் உள்ளக்காயத்துக்கான ஒத்தடமாக உள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், எங்கள் கடல் பகுதிக்குள் தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடிப்பதால் எங்கள் கடற்றொழிலாளர்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

ஆம், எங்கள் எதிரிகள் எங்களை வதைத்தபோது, எங்கள் தமிழக உடன்பிறப்புகள் இருக்கிறார்கள் என்ற ஒரே நம்பிக்கை மட்டுமே எங்களுக்கான ஒளிக்கீற்றாக இருந்தது.

ஆனால், இப்போது தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பகுதிக் கடற்றொழிலாளர்கள் எங்கள் கடல் எல்லைக்குள் அத்தமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால், எங்கள் கடற்றொழிலாளர்களின் நாளாந்த சீவனோபாயம் கேள்விக்குறியாகியுள்ளதுடன் கடற்றொழிலுக்கான உபகரணங்களும் அழிக்கப்படுவதால், தொழில் இழப்பையும் நம் கடற்றொழிலாளர்கள் எதிர்கொண்டுள்ளனர்.

எனவே எங்கள் உடன்பிறப்புக்களான தமிழக கடற்றொழிலாளர்கள் எங்கள் கடல் எல்லைக்குள் நுழைவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

இதை எங்களின் அவலத்தை – நெருக்கடியை உணர்ந்தேனும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே எங்களின் தயவான வேண்டுதல்.

# செம்மணி அகழ்வின் போது சிறீதரன் எம்.பி பிரசன்னமாக

## நீதிமன்றம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அடுத்த கட்ட அகழ்வானது எதிர்வரும் திங்கட்கிழமை (21) ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த அகழ்வில் தமது பிரசன்னம் தேவைப்படுவதாகவும் அதற்கு அனுமதி வழங்க வேண்டும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மன்றில் விண்ணப்பித்திருந்தார்.

குறித்த விண்ணப்பத்தைப் பரிசீலித்த யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ ஆனந்தராஜா அகழ்வுப் பணிகளில் பங்கேற்பதற்கான அனுமதியை அவருக்கு வழங்கினார்.

இதேவேளை யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கமும் தமது உறுப்பினர்களை கிரமமாக அகழ்வுப் பிரதேசங்களில் அவதானிப்புகளை மேற்கொள்ள அனுமதி கோரியவேளை நீதவான் அவர்களுக்கும் அனுமதி வழங்கினார். (ம-7)

# தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைவாக செயற்படுகிறோம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

மக்களுக்கு வழங்கிய தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு அமைவாகவே செயற்படுகிறோம். கொள்கை மாதிரிக்கு புறம்பாக செயற்படவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது வெரிடேச் ரிசேர்ச் நிறுவனம் அண்மையில் வெளியிட்ட அறிக்கை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வழங்கப்பட்ட பல வாக்குறுதிகளில் தெரிவு செய்யப்பட்ட வாக்குறுதிகளை மாத்திரம் தொகுத்து அவற்றில் ஒரு வாக்குறுதி மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது எந்தளவுக்கு நியாயமானது.

எமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கு அமைவாகவே நாங்கள் செயற்படுகிறோம். கடந்த 09 மாத காலப்பகுதியில் பல விடயங்களை செயற்படுத்தியுள்ளோம். மக்களுக்கு வழங்கிய கொள்கை மாதிரிக்கு புறம்பாக நாங்கள் செயற்படவில்லை.

பல்கலைக்கழகங்களில் பகிடிவதை பாரியதொரு சமூகப் பிரச்சினையாக மாற்றமடைந்துள்ளது.

பகிடிவதைக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும். பகிடிவதைக்கு எதிரான செயற்பாடுகளுக்கு பல்கலைக்கழக நிர்வாகக் கட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார்.(ம-7)

# வீதியை விட்டு விலகி கால்வாயில் கவிழ்ந்த கார்

## இருவர் உயிரிழப்பு

மஹியங்கனை - பதுளை பிரதான வீதியில் பயணித்த கார் ஒன்று மாபகடவெவ பகுதியில் வீதியை விட்டு விலகி கால்வாயில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

நேற்றுக் காலை 7 மணியளவில் ஏற்பட்ட இந்த விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தினையடுத்து மாபகடவெவப் பொலிஸ் பயிற்சி கல்லூரியின் அதிகாரிகள், மஹியங்கனை பொலிஸ் மற்றும் உள்ளூர்வாசிகள் மீட்பு பணிகளை முன்னெடுத்தனர்.

பின்னர், மீட்கப்பட்ட அவர்கள் உடனடியாக அம்பியூலன்ஸ் மூலம் மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதையடுத்து அவர்கள் இருவரும் உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் உறுதிப்படுத்தின. (நி)

# ரூ.110 கோடி பெறுமதியான 35 கிலோ தங்கத்துடன்

## கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 110 கோடி ரூபாய் பெறுமதியான 35 கிலோ கிராம் தங்கத்துடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமான நிலைய சுங்க அதிகாரிகளால் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் டுபாயில் இருந்து நாட்டிற்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

அவர் கிராண்ட்பாஸ் பகுதியில் வசிக்கும் 32 வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரிடமிருந்து 195 தங்க பிஸ்கட்டுகள் மற்றும் 13 கிலோ நகைகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. (ம-7)

# அரிய வகை நூல்களை தெரியப்படுத்துங்கள்

(யாழ்ப்பாணம்)

அரியவகை நூல்கள் தொடர்பாக எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள் என யாழ்ப்பாணம் மாநகர சபையின் பொதுசன நூலகம் அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிவிப்பில், யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் நூற்கொள்வனவை முன்னிட்டு அரியவகை நூல்கள் அல்லது நீங்கள் நூலகத்தில் தேடிக்கிடைக்காத நூல்களின் (தலைப்பு) விபரங்கள் இருந்தால் தயவுசெய்து 20.07.2025 ம் திகதிக்கு முன் எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

மின்னஞ்சல் :- mcjaffnamailm@gmail.com, mcjaffnamailm@yahoo.com என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கொழும்பு – புத்தளம் வீதியில்

# வான் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு - புத்தளம் வீதியில் லுணுவில சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சிலாபத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியில் பயணித்த நபர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர் மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் குளியாப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 14

சொக்கன்

பின்னே? சின்னச் சின்னத் தப்பு செய்த நாஜிக்களையெல்லாம் யூதர்கள் தேடிப் பிடித்துப் பழிவாங்கிக் கொண்டிருக்கும்போது லட்சக்கணக்கான யூத இனத்தவர்களை மொத்தமாக அழித்த அடால்ஃப் ஐக்மெனை விட்டுவைப்பார்களா? அதனால்தான் இந்தக் கொலைகாரன் பெயரை மாற்றிக்கொண்டு ஒளிந்திருக்கிறான்!

உடனடியாக அடால்ஃப் ஐக்மெனைப் பற்றி இஸ்ரேலுக்குத் தகவல் அனுப்ப முடிவெடுத்தார் லோதர் ஹெர்மன். ஆனால் அதற்கு முன்னால் அந்த ஆள் எங்கே இருக்கிறான் என்று கண்டுபிடிக்கவேண்டும்.

க்ளாஸ் பலமுறை சில்வியா வீட்டுக்கு வந்திருக்கிறான். ஆனால் சில்வியா ஒரு முறைகூட அவன் வீட்டுக்குப் போனதில்லை. நீங்க கவலைப்படாதீங்கப்பா அவனோட அட்ரசை நான் கண்டுபிடிக்கிறேன். என்றாள் சில்வியா. சொன்னபடி எப்படியோ கஷ்டப்பட்டு க்ளாஸின் வீட்டைக் கண்டறிந்து கதவைத் தட்டிவிட்டாள்.

நிலசிமிடங்கள் கழித்து கதவு திறக்கப்பட்டது சுமார் ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒருவர் சில்வியாவைச் சந்தேகமாகப் பார்த்தார். யாரும்மா நீ? உனக்கு என்ன வேணும்?

“க்ளாஸ் வீடு இது தானே?”

“ஆமா ஆனா அவன் வெளியே போயிருக்கானே”

“நீங்க?”

அவர் சில விநாடிகள் தயங்கினார். பிறகு நான் க்ளாலோட அப்பா என்றார்.

அவ்வளவுதான் அந்த நிமிடத்தில் அடால்ஃப் ஐக்மெனின் முடிவு தீர்மானிக்கப்பட்டு விட்டது. என்னதான் பொய்ப் பெயரில் ஒளிந்து வாழ்ந்தாலும் தன்னுடைய மகனுடைய பெயரில் இருக்கும் ஐக்மென் என்கிற ஒற்றை வார்த்தையை மறைக்காத சின்னத் தப்பு அவரைக் காட்டிக்கொடுத்துவிட்டது.



உடனடியாக இந்தத் தகவல் இஸ்ரேலுக்குப் பறந்தது. அடால்ஃப் ஐக்மென் இப்போது அர்ஜென்டினாவின் தலைநகரம் ப்யூனஸ் ஐரிஸில் இருக்கிறார் அவருடைய பொய்ப்பெயர் ரிகார்டோ க்ளெமென்ட், முகவரி...

அப்புறம் என்ன? நேராக அர்ஜென்டினாவுக்குப் போய் ஐக்மென் சட்டையைப் பிடித்து இழுத்துவர வேண்டியதுதானே?

ம்ஹீம் விடயம் அத்தனை சுலபம் இல்லை இதில் பல சர்வதேசச் சிக்கல்கள் இருக்கின்றன.

முதலில் இந்த ரிகார்டோ க்ளெமென்ட் தான் அடால்ஃப் ஐக்மென் என்பதற்கு என்ன ஆதாரம்? யாரோ சொல்வதை வைத்து நடவடிக்கை எடுக்கமுடியாது சாட்சி வேண்டும் அல்லது சம்பந்தப்பட்ட ஆளே தன்னை ஐக்மென் என்று ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுக்க வேண்டும்.

அப்போது அர்ஜென்டினாவில் வாழ்கிற ஒருவனஇஸ்ரேல்பொலிஸோ, உளவுத்துறையோ கைதுசெய்யமுடியாது. அந்த நாட்டு அரசாங்கம் இதற்கு நிச்சயமாக ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

எதற்கு இத்தனை வம்பு? பேசாமல் அந்த ஐக்மெனைச் சுட்டுத் தள்ளிவிட்டால் என்ன?

அடால்ஃப் ஐக்மென் செய்திருப்பது சாதாரணக் குற்றம் இல்லை. அதற்குத் தண்டனையாக அவரை வெறுமனே கொலை செய்தால் போதாது நீதிமன்றத்தில் நிறுத்திவைத்து செய்த தப்புகளையெல்லாம் ஒப்புக்கொள்ள வைக்கவேண்டும் அப்போதுதான் ஹிட்லர் ஆட்சியின் மிருகத்தனமான நடவடிக்கைகள் யூதர்கள் அனுபவித்த கொடுமைகளெல்லாம் உலகத்திற்குப் புரியும்.

சுருக்கமாகச் சொன்னால் நூலில் விழுந்த சேலையை எடுப்பது போல மிகவும் கவனமாகச் செயற்பட வேண்டிய விடயம் இது. கொஞ்சம் சொதப்பினாலும் மொத்தமும் கிழிந்து நாசமாகிவிடும்.

உடனடியாக இஸ்ரேல் அரசாங்கம் மொசாடைக் கூப்பிட்டது. விடயத்தைச் சொல்லி அடால்ஃப் ஐக்மென் பற்றிய குறிப்புகளை ஒப்படைத்தார்கள்.

அப்போதைய மொசாட் தலைவர் ஐஸர் ஹரேல் ஒரு மாலை நேரத்தில் ஐக்மென் ஃபைலைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தார் அவர்.

அன்று ராத்திரிமுழுக்க அவர் தூங்கவில்லை. அடால்ஃப் ஐக்மெனின் திருவிளையாடல்களை ஒவ்வொன்றாகப் படிக்கப் படிக்க அவருக்கு இந்த வேட்டையின் முக்கியத்துவம் புரிந்தது.

மறுநாள் காலை இஸ்ரேலின் பிரதமர் டேவிட் பென்குரியனைச் சந்தித்தார் ஐஸர் ஹரேல். இதுவரை கிடைத்திருக்கும் தகவல்கள், தனது திட்டத்தை அவருக்குவிளக்கிச்சொன்னார், அர்ஜென்டினாவில் இருக்கிற அடால்ஃப் ஐக்மெனை ரகசியமாகக் கைதுசெய்துஇஸ்ரேலுக்குக் கொண்டுவர வேண்டும்.அதுக்கு உங்க அனுமதி வேணும் சார்

ஒகே என்றார் பிரதமர்.

உடனடியாக ஆபரேஷன் ஐக்மென் தொடங்கியது. மொசாட்டின் மிகச் சிறந்த ஏஜென்ட்கள் ஒன்று திரட்டப்பட்டார்கள். அவர்கள் வெவ்வேறு பெயர்களில் அர்ஜென்டினாவுக்குள் நுழைவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விரைவில் மொசாட் உளவாளிகள் அர்ஜென்டினாவின் தலைநகரமான ப்யூனஸ் ஐரிஸுக்கு வந்து சேர்ந்தார்கள். வெவ்வேறு வீடுகளில் தங்கிக்கொண்டு வேலைகளைத் தொடங்கினார்கள்.

முதலில் அடால்ஃப் ஐக்மெனின் வீடு அலுவலகம், சுற்றுப்புறம் ஆகியவற்றைக் கண்காணித்துக் குறிப்பு எடுக்க வேண்டும். பிறகு அவர் தினந்தோறும் எத்தனை மணிக்கு ஆஃபீஸ் போகிறார் எப்படிப் போகிறார், எப்போது திரும்பி வருகிறார் என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

மற்ற தினசரி நடவடிக்கைகளையும் இதேபோல் துல்லியமாகப் பதிவு செய்ய வேண்டும், பிறகு இந்தத் தகவல்களின் அடிப்படையில் எங்கே எப்போது வலை விரித்தால் பட்சி சிக்கும் என்று கணக்குப் போட வேண்டும். இதுதான் ஃபார்முலா.

ஆனால் இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கிய மொசாட் உளவாளிகளுக்கு ஆரம்பத்திலேயே பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அவர்களிடம் இருந்த முகவரிக்குச் சென்றுபார்த்தால் அங்கே அடால்ஃப் ஐக்மெனையும் காணோம். ரிகார்டோ க்ளெமென்டையும் காணோம்! என்ன ஆச்சு? மொசாட் தன்னைத் தேடிவருகிறது என்று தெரிந்து கொண்டு ஐக்மென் உஷாராகி விட்டாரா? வேறு எங்கேயாவது தப்பித்துப் போய் விட்டாரா? தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 80 இலட்சம்...

தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த நிலையில் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இதில் புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த செல்வராசா லிபாஸ்கரன் (வயது-34) என்பவரே மரணமடைந்தவராவார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த நபர் கனடா செல்வதற்காக கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் 80 இலட்சம் ரூபாய் பணத்தினை கொழும்பில் உள்ள முகவரிடம் கொடுத்துள்ளார். இருப்பினும் அவர் கனடாவிற்கு அனுப்பி வைக்கப்படாத நிலையில் தனது பணத்தினை மீள வழங்குமாறு தொடர்ச்சியாக முகவரிடம் கேட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் இரு நாட்களுக்கு முன்னர் பணத்தைக் கேட்டவேளை அந்தப் பணம் ஒன்லைனில் களவாடப்பட்டதாக முகவர் கூறியுள்ளார். இதனால் விரக்தியில் நேற்று முன்தினம் இரவு (14) அலரி விதையை அரைத்துக் குடித்துவிட்டு தூக்கத்திற்குச் சென்றுள்ளார்.

பின்னர் நேற்றுக் காலை வாந்தி எடுத்துவிட்டு மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினார். பின்னர் அவர் புங்குடுதீவு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று மதியம் ஒரு மணியளவில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,104)

# 7 பாடங்கள்...

ஆங்கிலம், தாய்மொழி, மதம் மற்றும் விஞ்ஞானம் உள்ளிட்ட 5 பாடங்களைக் கட்டாயம் படிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பயங்கரவாதச்...

சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது குறித்து நேற்றைய அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் அவர் மேலும் கருத்துரைத்ததாவது,

பயங்கரவாதச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி கைது செய்கின்றோம் என்றால், இதில் இனரீதியாக அல்லாமல் அவர்களின் செயற்பாடுகளே தொடர்புபட்டுள்ளன.

இங்கு இனவாதமோ இனச்சாயமோ சூட்டப்பட எந்தக் காரணமும் இல்லை.

பயங்கரவாதச் சட்டத்துக்கு மாற்றீடாகப் புதிய சட்டம் அமுலாகும் வரை இச்சட்டமே நடைமுறைப்படுத்தப்படும் என்றார். (ம-7)

# நிழல்படம்...

வியலாளர்களுக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற வேளையே குறித்த கட்டுப்பாட்டை மன்று விதித்தது.

செம்மணி அகழ்வுகளை பார்வையிட விரும்புவோர் நீதிமன்றுக்கு விண்ணப்பித்து மன்றின் அனுமதியைப் பெறவேண்டியமை கட்டாயமாக்கப்பட்டுள்ள நிலையில் ஊடகவியலாளர்களும் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தனர்.

அதனைப் பரிசீலித்த மன்று அங்கு கண்டெடுக்கப்படும் சான்றுப்பொருட்கள் தொடர்பிலான பொருட்கோடல்கள் மக்கள் மத்தியில் தேவையற்ற குழப்பத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தும் என்ற காரணத்தால் ஊடகவியலாளர்களுக்கு நிழல்படம் எடுப்பதற்கு மாத்திரம் அனுமதி வழங்கியது. (ம-7,33)

# வெளிநாடுகளி...

இணையவழி மூலம் கடவுச்சீட்டைப் பெற அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி வெளிநாட்டில் உள்ள அடையாளம் காணப்பட்டுள்ள 20 தூதரகம் மூலம் இச்சேவை முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-7)

# செயலாளர்...

கூட்டுறவு மற்றும் கைத்தொழில் அமைச்சின் செயலாளராகவும் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக எஸ்.சத்தியசீலனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கோப்பாய் பிரதேச செயலாளராக இருந்த எஸ்.சிவஸ்ரீ வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகவும் வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளராக ஆழ்வாப்பிள்ளை ஸ்ரீயும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

# செம்...

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தனது இடைக்கால அறிக்கையினையும் சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன் தனது ஆய்வறிக்கையையும் சமர்ப்பித்தனர்.

இவ் அறிக்கைகள் வாயிலாக செம்மணி சித்துப்பாத்தி மயானத்தில் இனங்காணப்பட்டுள்ள மனிதப் புதைகுழியானது சாதாரணமாக மனித உடல்களை அடக்கம் செய்யும் பகுதியல்ல. அது ஓர் குற்றவியல் சம்பவங்கள் நடந்த பிரதேசமாக தாங்கள் கருதுவதாகத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் மேலதிகமான ஆய்வுகள் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டது.

முன்னதாக நீல நிறப்பை, பொம்மைகள் உள்ளிட்டவற்றுடன் மீட்கப்பட்ட மனித எலும்புத் தொகுதி தொடர்பிலான அறிக்கையினையும் நீதவான் கோரியிருந்தார்.

அது தொடர்பில் நேற்று சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் தனது ஆய்வறிக்கையில் மன்றுக்குத் தெளிவுபடுத்தினார்.

அதில் S25, S48, S56 என அடையாளமிடப்பட்டுள்ள சிறுவர்களுடையது என நம்பத்தகுந்த என்புக்கூட்டுத் தொகுதிகள் பண்பியல் எலும்பியல் ரீதியில் ஒருமித்த தன்மையுள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

அதிலும் குறிப்பாக என்புத் தொகுதியானது 4 முதல் 5 வயதுக்குட்பட்ட உத்தேச வயதைக் கொண்ட சிறுமியின் என்புத் தொகுதியாக இருப்பதற்கான வாய்ப்புள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிபுணர்களின் சமர்ப்பணங்களை ஏற்ற நீதவான் வழக்கின் அடுத்த கட்ட விசாரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6ஆம் திகதி இடம்பெறும் என திகதியிடப்பட்டதோடு குறித்த விசாரணையானது திறந்த நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-7)











































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலைவாய்ப்பு

யாழ்.நகர் மற்றும் தென்மராட்சி பகுதிகளில் கணினித் துறைகளில் பணியாற்றுவதற்கு அனுபவம் வாய்ந்த/ அனுபவமற்ற பெண் பணியாளர்கள் தேவை.

Digitec Technology

077 868 8517

(4817)



## காயத்திரி திருமண சேவை

சகல விதமான திருமண பொருத்தங்களும் பார்க்கப்படும்.
அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

உரும்பிராய் 077 844 9861

(4816)



## DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2027

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம் :
19.07.2025 காலை 8.00 மணி (சனி)

நிர்வாகம் : 077 778 9815

(C-3423)



## மாப்பிள்ளை தேவை

01. நெடுந்தீவு, இந்து, 1996, அஸ்வினி, MBBS Doctor, UK பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 47836
02. நெல்லியடி, இந்து, 2001, திருவோணம், Bsc, UK பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 47174
03. கரவெட்டி, இந்து, 1993, ரோகிணி, Doctor (MD) MPH USA பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 46678
04. சுதுமலை, இந்து, 1982, உத்திரட்டாதி, CPA, USA Citizen Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 38499
05. வட்டுக்கோட்டை, இந்து, 1984, புனர்பூசம், Business Management UK Citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 33794
06. இளவாலை - அச்சுவேலி, இந்து, 1995, பூசம், B.Com Australia பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை.43129
07. மானிப்பாய், இந்து, 1993, ஆயிலியம், Bachelor of Medicine Bachelor of Sergery (MBBS) Bachelor of Laws, LLB, Australia Citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 37015
08. நெல்லியடி, இந்து, 1995, மகம் BSc மணப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 40815
09. மாதகல், இந்து, 1992, ரோகிணி Civil Engineering (Moratuwa University) Phd (USA) மணப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 46435
10. தெல்லிப்பழை, இந்து, 1988, மிருகசீரிடம் (Bsc (Hons) Software Engineering and MBA Canada மணப் பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. 31812

எம்மிடம் எல்லா நாட்டிலும் unmarried, Divorce மணப் பெண்கள் மாப்பிள்ளைகளும் உண்டு.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

(3428)



## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3950/-
11-16 Kg 2690/-
21-27 Kg 2490/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1400 | France 11Kg 2200 | Germany 11Kg 2000
Swiss 11Kg 2470 | Australia 11Kg 2130 | Italy 11Kg 2250

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



பெற்றோர், மாணவர்களின் தெரிவு...

A/L - 2027 புவியியல்

N.BABU (சனி, ஞாயிறு- 9 a.m)

- ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
- புதிய அனுமதி வழங்கப்படும்.

DMI ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

077 936 5087

(4822)


## மாரடைப்பால் குடும்பஸ்தர் மரணம்

வீட்டில் உறக்கத்தில் இருந்த நிலையில் குடும்பஸ்தர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

சு.ஜெயரஞ்சன் (வயது-54) என்பவர் நேற்று முன் தினம் மயிலிட்டி வடக்கிலுள்ள தனது வீட்டில் உறக்கத்தில் இருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். (ம)


## WEC Vacancy

நீங்கள், வடமாகாணத்தில் வேலை பெறுவதற்கு அரியதோர் வாய்ப்பு

தகைமை : Gr 10, O/L, A/L
24 வேலை நாட்கள்

- தங்குமிடம், காலை உணவு, இரவு உணவு இலவசம்.
- கவர்ச்சிகரமான போனஸ் (Phone,காசு etc.) பெறமுடியும்.


முற்பதிவுக்கு 076 372 9033 இவ் இலக்கத்திற்கு SMS செய்யவும்.

076 372 9033/076 888 9384

(3331)


## மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 05 - 1938



மறைவு
15 - 07 - 2025

# தம்பிப்பிள்ளை மணிசுந்தரம்
## (ஓய்வுநிலை அதிபர்)

கரணவாய் கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை மணிசுந்தரம் (ஓய்வு பெற்ற அதிபர்) அவர்கள் நேற்று (15.07.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சந்தனம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பெருமாள் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் சறோஜினிதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பேரின்பவதியின் சகோதரனும் கௌரி (ஓய்வுநிலை தாதி உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), பிரபாகரன் (ஓய்வுநிலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்), முரளிகரன் (விஜி வீடியோ விஷன்), கிருபாகரன் (வேல்ட் விஷன்), கௌசல்யா, சுதாகரன் (MOH Office பருத்தித் துறை), சசிகரன் (ஆசிரியர் -யாக்கரு விநாயகர் வித்தியாலயம், ஞானாசாரியார் கல்லூரி), சதீஸ்கரன் (சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் - கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தெய்வேந்திரம் (ஓய்வுநிலைத் தாதி உத்தியோகத்தர் - யாழ்.போதனா வைத்தியசாலை), ரேனுகா, தேவகி (ஆசிரியை - யா/கரணவாய் பொன்னம்பல வித்தியாலம்), இராமேஸ்வரி (விடுதிச் சகோதரி - மந்திகை ஆதார வைத்தியசாலை), திருமாலழகன் (முகாமைத்துவப் பணிப்பாளர் - வலம்புரிப் பத்திரிகை), தர்சினி (ஆசிரியை - அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியால யம்), சாந்தரூபி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கர வெட்டி), ஜீவகி (பிரதேச செயலகம் - கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பானுகா (யாழ்ப்பாண பல்கலைக் கழகம், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம்), திலக்ஷி (வருகைதரு விரிவுரையாளர் - யாழ்.பல் கலைக்கழகம்), தீபிகா (யாழ்.பல்கலைக்கழகம், LOLC Finance நெல்லியடி அலுவலக உத்தியோகத்தர்), விஷ்மிகா, மகிஷா, மஜிஷன், மதுசன், அபிஷா, அபிலாஷா, தன்சிகா, தருண், துவிஷானன், விதுஷயன், சபினாஷ், சிவாத்மிகா, ஸ்ருதிகா, சுபஸ்ரிகன், தாருகேஷ், டிருத்திக்கேஷ், பவிஷ்ணா ஆகியோரின் அன்புப் பேரனும் அதித், அகத் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.07.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

தகவல் :
குடும்பத்தினர்


## வீடு வளவும் நெற் காணியும் விற்பனைக்கு

சுழிபுரம் மத்தி பறாளை வீதியில் அமைந்துள்ள 6 1/2 விஸ்தீரணம் உள்ள வளவும் அதனுள் அமைந்த 3 அறைகள், கோல், சமையலறையும் தனிக் கிணறும் உடைய வீடும்
பறாளை வயல் வெளியில் அமைந்த 6 பரப்பு நெற்பரப்பு காணியும் விற்பனைக்குள்ளது.

077 744 8080

(4809)



## புதிய பிரிவுகள் ஆரம்பம் 19.07.2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
aat (SriLanka)
(AA1, AA2, AA3)
Qualification:- G.C.E O/L 6 Passes (Medium - Tamil & English)

✧ A/L மாணவர்களின் நலன் கருதி வார நாட்களில் aat வகுப்புக்கள் நடாத்த தீர்மானித்துள்ளோம்.

கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level I,II
Qualification:- G.C.E A/L 3 Passes(Medium - Tamil & English)

Further Details:- Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382
0774405917

(C-3380)



## அறைகள் வாடகைக்கு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இராமநாதன் வீதியில். கல்வி கற்கும்/ வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அறைகள் மாதாந்த வாடகைக்கு உண்டு

077 208 7778

(4818)



## A/L - 2027
கலை, வர்த்தகம்

புதிய பிரிவு
19.07.2025
சனி காலை 9 மணி

DMI Jaffna

077 848 0604

(C-3426)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org